# பத்திரிக்கை செய்தி

உலக புற்றுநோய் தினம் - 4 பிப்ரவரி, 2025

உதவும் உள்ளங்கள் - நெல்லை புற்றுநோய் மருத்துவமனை, திருநெல்வேலி

**உலக புற்றுநோய் தின மையக்கருத்து:**
**“UNITED BY UNIQUE” - "ஒன்றுபடுவோம், தனித்துவத்துடன்"**

ஒவ்வொரு புற்றுநோயும் தனித்துவமானது, ஒவ்வொரு புற்றுநோயாளியின் பயணமும் தனித்துவமானது, ஒவ்வொரு நோயாளியின் பின்னும் ஒரு தனிக்கதை இருக்கிறது. ஒவ்வொரு நோயாளியின் புற்றுநோயின் தன்மை, அவர்களின் சமூக கலாச்சார வேறுபாடுகள், உளவியல் கூறுகள், அவர்களின் தனிப்பட்ட குணாதிசயங்கள், குடும்ப சூழல்கள் போன்ற தனித்துவத்தை உணர்ந்து, அதற்கேற்ப அவர்களுக்கு சிகிச்சையும், மன பலமும் கொடுத்து, ஒருவரோடு ஒருவரை ஒப்பிடாமல், தனித்துவத்தை பாராட்ட வேண்டும்.

இதற்கு, மருத்துவர்கள், குடும்பத்தவர்கள் மட்டுமல்ல, நம் ஒவ்வொருவருக்கும் பங்கு இருக்கிறது. இதை புரிந்து கொண்டு அனைவரும் இணைந்து ஒற்றுமையுடன் புற்றுநோயை எதிர்த்து போராட வேண்டும் என்பதே இந்த கருத்தின் பொருள்

- ‘United by Unique’

**<u>இந்தியாயில் புற்றுநோயின் தாக்கம் அதிகரிக்கிறதா?:</u>**

ஆம், இந்தியாவில் புற்றுநோயின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது. 2022- ஆம் ஆண்டில் மட்டும் 14,61,427 புதிய நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். 2015 ஆண்டிலிருந்து 2025 வரை புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் 27.7% அதிகரித்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இது, ஆரம்பத்திலேயே கண்டறிய வேண்டியதன் அவசியத்தையும், சரியான சிகிச்சையை சரியான நேரத்தில் கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்துகிறது.

**தமிழகத்தின் நிலை என்ன?:**

தமிழகத்தில் கடந்த பத்தாண்டுகளில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. புதிய புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை 2012 இல் 53,022 இல் இருந்து 2018 இல் 77,138 ஆக அதிகரித்துள்ளது. 2022 இல் இது 88,750 ஆக அதிகரிக்கும் என கணக்கிடப்பட்டது.

**திருநெல்வேலியில் புற்றுநோய் பாதிப்பு அதிகரிக்கிறதா?**

திருநெல்வேலி மாவட்டம் புற்றுநோய் பாதிப்புகளின் அடிப்படையில் தமிழ்நாட்டில் 27 வது இடத்தில் இருந்தாலும், புற்றுநோய் எண்ணிக்கையில் அதிகரித்து தான் வருகிறது.

- புதிய நோயாளிகளின் எண்ணிக்கை 2018 இல் 2,537 இல் இருந்து 2019 இல் 2,977 ஆக அதிகரித்துள்ளது.
- பெண்களுக்கு வரும் புற்றுநோய்களில் முதல் மூன்று இடத்தில் இருப்பது, மார்பக புற்றுநோய், கருப்பை வாய் புற்றுநோய், சினைப்பை புற்றுநோய்.
- இந்த மூன்றும் சேர்ந்து பெண்களுக்கு வரும் புற்றுநோய்களில் 35.4%.
- இதில், முதலிடத்தில் இருப்பது மார்பக புற்றுநோய்.
- திருநெல்வேலியில் உள்ள புற்றுநோயாளிகளில் 5-ல் ஒருவர் மார்பக புற்றுநோயாளி (20%).

**புற்றுநோயைத் தடுக்க முடியுமா?**

சுமார் 60% புற்றுநோய்கள் வாழ்க்கை முறை சார்ந்ததாகவே இருக்கிறது. புகையிலை பழக்கம், மதுப் பழக்கம், முறையற்ற உணவுப்பழக்கம், ஊட்டச்சத்துள்ள உணவு எடுத்துக்கொள்ளாதிருத்தல் உடலுழைப்பு அல்லது உடற்பயிற்சியில்லாத வாழ்க்கை,

வெளிப்புற மாசு, போன்றவை புற்றுநோயின் அபாயத்தை அதிகரிப்பதில் முக்கிய இடத்தை பிடிக்கிறது.

**<u>புற்றுநோயை குணப்படுத்த முடியுமா?</u>**

ஆம், ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலம் பெரும்பாலான புற்றுநோய்களை இன்றைய மருத்துவ உலகில் குணப்படுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. நாளுக்கு நாள் புதிய புதிய கண்டுபிடிப்புகள் வந்து கொண்டிருக்கிற நிலையில் சரியான நேரத்தில், முறையான சிகிச்சையை எடுத்துக் கொள்வதன் மூலம் குணப்படுத்தும் வாய்ப்பு பல மடங்கு அதிகரிக்கிறது.

**<u>ஆரம்பத்தில் கண்டு பிடிப்பது சாத்தியமா?</u>**

ஆம், பரவலாக காணப்படும் புற்றுநோய்களான மார்பகப்புற்றுநோய், கருப்பை வாய் புற்றுநோய், வாய் புற்றுநோய் போன்றவை ஆரம்பத்திலேயே அறிந்து கொள்ள பரிசோதனை முறைகள் உள்ளன.
குறிப்பாக, கருப்பை வாய் பரிசோதனை செய்து கொள்வதன் மூலம் கருப்பை புற்றுநோய் வரக் காரணமான HPV வைரஸ், மற்றும் பிற காரணிகள் இருந்தால் அதை சுலபமாக சரி செய்வதன் மூலம், 99.99% கருப்பை வாய் புற்றுநோய் நம் வாழ்நாளில் வராமலேயே தடுத்து விடலாம்.

சரியான புரிதல் இல்லாமையாலும், விழிப்புணர்வு இல்லாமலும், "நான் நன்றாகத்தானே இருக்கிறேன், நான் ஏன் பரிசோதனை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தினாலும், பலர் புற்றுநோய் பரிசோதனை முகாம்களில் பரிசோதனைக்கு வரத் தயங்குகிறார்கள். குறிப்பாக, பெண்கள் தங்கள் வெட்கத்தையும் தயக்கத்தையும் விட்டு பரிசோதனை செய்து கொள்ள முன் வரவேண்டும்.

**<u>நெல்லை புற்றுநோய் மருத்துவமனை:</u>**

2011 ஆம் ஆண்டு முதல் நெல்லை கேன்சர் கேர் சென்டர் தென் மாவட்டங்களில் புற்று நோய் விழிப்புணர்வு, பரவலாக வரும் புற்றுநோய்களை ஆரம்பத்திலேயே கண்டறியும்

பரிசோதனை முகாம்கள், வீடு தேடி நோய் தணிப்பு சிகிச்சை போன்றவற்றை செய்து வருகிறது. இதுவரை,

- 2,547 பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.
- 71,208 பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது
- 3135 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன
- 2.5 லட்சம் பேருக்கு புற்றுநோய் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது

பயிற்சி பெற்ற உயர் தகுதி வாய்ந்த புற்றுநோயியல் நிபுணர்கள், மகப்பேறு மருத்துவர்கள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அடங்கிய குழு ஒவ்வொரு நோயாளியின் தனித்துவத்தை உணர்ந்து, சிகிச்சைகளை அளித்து வருகிறது.

**திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு ஒருங்கிணைந்த புற்றுநோய் மருத்துவமனை:**

மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கும் புற்றுநோயாளிகளில் கிட்டத்தட்ட 50% புற்றுநோயாளிகள் சிகிச்சைக்காக சிறந்த வசதிகளை நாடி பிற மாவட்டங்களுக்கு செல்லுகின்றனர். திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு மருத்துவமனை தவிர வசதியில்லாத நோயாளிகளுக்கு என்று தொண்டு அடிப்படையிலான புற்றுநோய் மருத்துவமனைகள் இல்லை.

பக்கத்து மாநிலங்களுக்கு செல்லும் நோயாளிகள், மொழி தெரியாமல் சிரமப்படுவதோடு மட்டுமல்லாமல், சிகிச்சைக்காக நீண்ட காத்திருப்பும் இருக்கிறது. புற்றுநோயின் சிகிச்சைகள் நோயின் தன்மையைப் பொறுத்து வெகு நாட்கள் ஆகும்பொழுது, சிகிச்சை செலவை விட, போக்குவரத்து, உணவு, தங்குமிடம், நோயாளியுடன் கூட செல்லும் குடும்பத்தினர் வேலைக்கு செல்ல முடியாமல், வருவாய் இழப்பு என பொருளாதார ரீதியாகவும் சிரமப்படும் சூழல் உள்ளது. மேலும், வெகு நாட்கள் அவர்கள் வீட்டுக்கு செல்ல முடியாமல், சிகிச்சை எடுக்கும் இடங்களிலேயே தங்குவதால் மன உளைச்சலுக்கும் ஆளாகின்றனர்.

இதைக் கருத்தில் கொண்டு, திருநெல்வேலியில் ஒரு ஒருங்கிணைந்த புற்றுநோய் மருத்துவமனையை திருநெல்வேலியிலிருந்து 20 நிமிட பயணத்தில், செங்குளம் ரயில் நிலையம் அருகில், தேசிய நெடுஞ்சாலையிலிருந்து சுலபமாக செல்லும் இடத்தில், 5.3

ஏக்கர் நிலத்தில் உதவும் உள்ளங்கள் தொண்டு நிறுவனத்தின் அரிய முயற்சியில் உருவாகி வருகிறது.
இந்த மருத்துவமனை திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி, தென்காசி மற்றும் தூத்துக்குடி போன்ற அண்டை மாவட்டங்களில் உள்ள கிராமங்களிருந்தும் நோயாளிகள் சுலபமாக அணுகும் வகையில் அமைந்திருக்கிறது.

இதற்கான முதல் கட்ட பணிகள் செப்டம்பர் மாதம் முடிவடைந்து அக்டோபர் மாதம் 2-ஆம் தேதியிலிருந்து இந்த மருத்துவமனை செயல்பட உள்ளது.

**'United by Unique' தனித்துவத்தை உணர்ந்து ஒன்றுபடுவோம்:**

ஒவ்வொரு நோயாளிக்குப் பின்னாலும் இருக்கும் ஒரு தனிப்பட்ட கதையை நாம் மறந்து விடக் கூடாது. ஒவ்வொரு புற்றுநோயாளியின் தனித்துவத்தை உணர்ந்து, அவர்கள் பின் ஒழிந்திருக்கும் கதைகளையும், அவர்களின் தனித்துவ புற்றுநோய் பயணத்தையும் நாம் காது கொடுத்து கேட்டு அவர்களுக்கு உரிய ஆதரவைக் கொடுப்போம் என நாம் ஒவ்வொருவரும் இந்த உலக புற்றுநோய் தினத்தன்று உறுதி எடுப்போம்.

உலக புற்றுநோய் தினத்தின் மையக்கருத்தை செயல்படுத்தும் வகையில், நெல்லை புற்றுநோய் மருத்துவமனை, நோய்களைத் தடுப்பதற்கும், ஆரம்பத்திலேயே கண்டறிவதற்கும், சரியான நேரத்தில் கற்றுத் தேர்ந்த நிபுணர்களை வைத்து குணப்படுத்துவதற்கும், குணப்படுத்த முடியாத சூழலில் உள்ள நோயாளிகளுக்கு வீடுகளுக்கே சென்று உரிய சிகிச்சைகளை அளிப்பதற்கும் முழு அர்ப்பணிப்புடன் ஒரே குழுவாக, ஒரு குடும்பமாக செயல்பட்டு வருகிறது.

இதில் பத்திரிகை துறையினரின் பங்கும் ஆதரவும் மிகவும் முக்கியமானது. இந்த ஆண்டு புற்றுநோய் தினத்தில், நெல்லை புற்றுநோய் மருத்துவமனை பத்திரிகை துறையினர் அனைவரையும் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு எடுத்துச் செல்லவும், தென் மாவட்டங்களில், புற்றுநோயின் எண்ணிக்கை வரும் காலங்களில் குறையவும், ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலம் புற்றுநோயின் இறப்பு விகிதத்தை குறைக்கவும் பணியாற்ற அன்புடன் வேண்டுகோள் விடுக்கிறது.

************************************************************

நெல்லை புற்றுநோய் மருத்துவமனை.
திருநெல்வேலி.
தொடர்புக்கு:
முனைவர். இ. விதுபாலா,
**அலை பேசி எண்**: 94442 74700